**භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව**
**திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம**
# Department of Treasury Operations

මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය, තැ.පෙ. 1559, කොළඹ 0 1.
பொதுத்திறைசேரி, நிதி திட்டமிடல் அமைச்சு, த.பெ.இல.1559, கொழும்பு 01.
General Treasury, Ministry of Finance & Planning, P.O.Box: 1559, Colombo 01.

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General: 0094 112 484729, dgto@tod.treasury.gov.lk
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 0094 112 484970
පොදු / பொது / General: 0094 112 484500, 0094 112 484600

මගේ අංකය / எனது இல / My No.: TO/REV/M2/07/2010
ඔබේ අංකය / உமது இல / Your No.:
Date: 2012.06.28

திறைசேரி செயற்பாட்டுச் சுற்றறிக்கை இலக்கம் : 02/2012

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள் அனைவருக்கும்,

2012.06.30 ஆம் திகதியன்று நிலுவை வருமான அறிக்கையினை சமர்ப்பித்தல்.

அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம் 01/2002 மற்றும் 2002.07.17 ஆம் திகதிய சுற்றறிக்கை மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பாக உங்களது கவனத்தை ஈர்க்கச் செய்ய விரும்புகிறேன்.

02. வருமானம் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் தமது பொறுப்புக்களின் கீழ் காணப்படுகின்ற வருமானக் குறியீட்டு இலக்கங்களுடன் தொடர்புடைய நிலுவை வருமானம் பற்றிய அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும், திறைசேரி செயற்பாட்டுப் பணிப்பாளர் ாயகம் அவர்கள் கணக்கீட்டு உத்தியோகத்தராக பணியாற்றும் பின்வரும் வருமானக் குறியீட்டு இலக்கங்களின் கீழ் ஒன்றுதிரட்டப்பட்ட வருமானம் தொடர்பாக ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்களை ஒன்றிணைப்பதன் மூலம் நிலுவை வருமான அறிக்கைகளை தயாரித்து கணக்காய்வாளர் நாயத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

| வருமானத் தலைப்பு குறியீட்டு இலக்கம் | விபரம் |
|---|---|
| 20.02.01.01 | அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கப் பெறும் வருமானம் - அரசாங்க கட்டிடங்களுக்கான வாடகை |
| 20.02.01.99 | அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கப் பெறும் வருமானம் - ஏனைய வாடகைகள் |
| 20.02.02.99 | வட்டி – ஏனைய |
| 20.03.01.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - திணைக்கள விற்பனைகள் |
| 20.03.02.99 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - நிருவாகக் கட்டணம் - நானாவித |
| 20.03.03.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - தண்டப் பணமும், அரச உடமையாக்கல்களும் |
| 20.03.99.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - ஏனைய பெறுகைகள் |
| 20.05.99.00 | மெய் மாற்றல்கள் - ஏனையவை |
| 20.06.02.00 | மூலதன வருமானங்கள் - மூலதனச் சொத்துக்களின் விற்பனை |

03. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள வருமான குறியீட்டு இலக்கங்களுக்காக 2012.06.30 திகதியன்று நிலுவை வருமான அறிக்கைகளை மேலே குறிப்பிட்டுள்ள அரசாங்க நிதிக் கொள்கைச் சுற்றறிக்கை இலக்கம் 01/2002 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் (இணைப்பு 1) இன் பிரகாரம் தயாரித்து 2012.07.15 ஆம் திகதிக்கு முன்னர் திறைசேரி செயற்பாட்டுப் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். குறித்த தினத்தன்று நிலுவை வருமானங்கள் ஏதும் இல்லாத பட்சத்தில் தயவு செய்து வெற்று அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கவும்.

ஒப்பம்/எம்.எஸ்.டீ. ரனசிறி
பணிப்பாளர் நாயகம்
திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம்

பிரதிகள் : 1. கணக்காய்வாளர் நாயகம்.
2. பணிப்பாளர் நாயகம், அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்.

අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (මුදල් ප්‍රවාහ සහ ඒකාබද්ධ අරමුදල් කළමනාකරණ) / மேலதிக பணிப்பாளர் நாயகம் (காசுப்பாய்ச்சலும் திரட்டு நிதி முகாமைத்துவமும்) / *Additional Director General (Cash Flows & Consolidated Funds Management)* — *Tel: 0094 112 484738*, *chandraw@tod.treasury.gov.lk*

අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (ණය සේවා සහ ගිණුම්) / மேலதிக பணிப்பாளர் நாயகம் (கடன் சேவைகளும் கணக்குகளும்) / *Additional Director General (Debt Servicing & Accounting)* — *Tel: 0094 112 484748*, *Fax: 0094 112 320042*

අධ්‍යක්ෂ (අරමුදල් කළමනාකරණ) / பணிப்பாளர் (நிதி முகாமைத்துவம்) / *Director (Funds Management)* — *Tel: 0094 112 484994*

අධ්‍යක්ෂ (ණය සේවා සහ ගිණුම්) / பணிப்பாளர் (கடன் சேவைகளும் கணக்குகளும்) / *Director (Debt Servicing & Accounting)* — *Tel: 0094 112 484750*

අධ්‍යක්ෂ (ආදායම්) / பணிப்பாளர் (வருமானம்) / *Director (Revenue)* — *Tel: 0094 112 484638*

இணைப்பு 01

# நிலுவை வருமானம் பற்றிய அறிக்கை – 2012.06.30

(i) சட்டம் / அதிகாரம் :- (சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்கள் அல்லது சுற்றறிக்கையின் ஆலோசகைள்

(ii) சட்டம் / அதிகாரம் :- (சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் அல்லது நிறுவனங்கள்)

(iii) வருமான வகை:-

(iv) வருமானப் இலக்கம் :-

| விபரம் | நிலுவை வருமானம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2009.12.31 வரையில் நிலுவைத் தொகை ரூ. | 2010 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை ரூ. | 2011 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை ரூ. | 2012 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை ரூ. | 2012.06.30 ஆம் திகதியன்று மொத்த நிலுவைத் தொகை (2-5 கூட்டுத் தொகை) ரூ. | நிலுவைக்கான காரணம் ரூ. | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்குள்ள இயலுமை பற்றிய சான்றிதழ் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | | | | | |

திகதி

சரியானதென உறுதிப்படுத்துகிறேன்

..............................................

செயலாளர்/திணைக்களத் தலைவர்/மாவட்டச் செயலாளர்